(பதிப்புரிமையுடையது)

உ

சிவமயம்



விவேகானந்த சபை கொழும்பு

அகில இலங்கை

4 சைவசமய பாடப்பரீட்சை : 2022

தரம் நான்கு



nselva.com

காலம் அளவு	1.00 மணி

புள்ளிகள் : 100

இல.
மாணவர் சுட்டெண்:

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

1. 1 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன்கீழ் கோடிடுக.

1. பிரம்ம தேவரின் தலையில் குட்டி அவரைச் சிறை வைத்தவர் யார்?

   1) விஷ்ணு 2) பிரம்மா 3) முருகன்

2. நாம் கோயிலை அண்மித்ததும் முதலில் வணங்கவேண்டியது யாரை?

   1) விநாயகர் 2) பலிபீடம் 3) கோபுரம்

3. சூரியனுக்கு நன்றி செலுத்தும் நாளாக அமைவது எது?

   1) தைப்பொங்கல் 2) சித்திரைப்புதுவருடம் 3) தீபாவளி

4. செல்வத்தத்தை தரும் கடவுள் யார்?

   1) சரஸ்வதி 2) இலக்குமி 3) துர்க்கை

5. ஆலயங்களில் பெண்கள் செய்யும் நமஸ்காரம் எது?

   1) சூரியநமஸ்காரம் 2) அட்டாங்கநமஸ்காரம் 3) பஞ்சாங்கநமஸ்காரம்

6. பிதிர்ச்சாபத்தினால் கீரிமுகம் நீங்கிய திருத்தலம் எது?

   1) முன்னேச்சரம் 2) கோணேச்சரம் 3) நகுலேச்சரம்

7. கண்ணன் மக்களைக் காப்பாற்ற குடையாகப் பிடித்த மலை எது?

   1) கோவர்த்தனமலை 2) சிவனொளிபாதமலை 3) இமயமலை

8. பஞ்சபுராணம் ஓதும் வரிசையில் நான்காவதாக ஓதப்படுவது எது?

   1) திருவாசகம் 2) திருவிசைப்பா 3) திருப்பல்லாண்டு

9. இரணியனை அழிக்க திருமால் எடுத்த அவதாரம் எது?

   1) வாமன அவதாரம் 2) இராமஅவதாரம் 3) நரசிம்மம்

10. காரைக்கால் அம்மையாரின் இயற்பெயர் யாது?

    1) சோமாவதி 2) புனிதவதியார் 3) விரோசனை

(10 x 3 = 30 புள்ளிகள்)

2. பொருத்தமான சொற்களை தெரிந்து எடுத்து இடைவெளியில் எழுதுக:.

அட்டாங் நமஸ்காரம்	நிறைகுடம்	இந்திரன்	அறுகம்புல்	போகி

1. தைப்பொங்கலுக்கு முதல்நாள் கொண்டாடும் பண்டிகை ..... ஆகும்.
2. கோயிலில் ஆண்கள் ..... செய்வார்கள்.
3. விசேட தினங்களில் வாசலில் ..... வைப்பார்கள்.
4. விநாயகருக்கு பிடித்த பூசைப் பொருள் ..... ஆகும்.
5. மழையைத் தரும் கடவுள் ..... ஆகும்.

(5 x 2 = 10 புள்ளிகள்**)**

3. பின்வருவனவற்றுக்கு விடை எழுதுக?

1. வெள்ளைக் கமலத்தில் வீற்றிருக்கும் தெய்வம் எது?

   .....

2. தண்ணளிபுரம் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது.

   .....

3. சிவபெருமானை வழிபடுஞ் சமயத்திற்குப் பெயர் யாது?

   .....

4. இறைவன் வாழும் இடம் எது?

   .....

5. திருத்தம்பலேஸ்வரம் என்ற பெயரால் அழைக்கப்படும் ஆலயம் எது?

   .....

6. இந்து சமயத்தவர் கொண்டாடும் பண்டிகைகள் இரண்டு தருக?

   .....

7. நவராத்திரி விழாவின் போது ஒன்பதாவது இரவு செய்யப்படும் பூசையின் பெயர் யாது?

   .....

8. சக்தி எனும் சொல்லுக்கு பொருள் யாது?

   .....

9. சகலகலாவல்லிமாலை யாரால் பாடப்பட்டது?

   .....

10. முருகப் பெருமானிடம் சீடனாக அமர்ந்து பாடம் கற்றவர் யார்?

    .....

(10X2= 20 புள்ளிகள்**)**

4. கீழே தரப்படும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.

1. நமிநந்தியடிகள் ஏமப்பேரூர் என்னும் ஊரில் வாழ்ந்தார் .....
2. திருவள்ளுவரால் இலங்கை சிவபூமி என்று போற்றப்பட்டது .....
3. உலகத்திற்கே கருத்தா சிவபெருமான் ஆவார் .....
4. குருகுலக்கல்வியில் மாணவர்களுக்கு மொழிப்பாடம் முதன்மையாக கற்பிக்கப்பட்டது .....
5. படைத்தல் தொழில் செய்பவர் பிரம்மா ஆவார் .....

(5X2= 10 புள்ளிகள்**)**

5. பின்வருவன பற்றி இரண்டு வாக்கியம் எழுதுக.

1. குருகுலக்கல்வி

   .....

   .....

2. விநாயகர்

   .....

   .....

3. நவராத்திரி

   .....

   .....

(06 புள்ளிகள்**)**

6. பின்வரும் கூற்றுக்கள் யாரால்? யாருக்கு? கூறப்பட்டவை என எழுதுக?

1. “எங்கே வேதத்தை ஓதுங்கள் பார்க்கலாம்”

   யாரால்..... யாருக்கு.....

2. “உனது திரு நடனக் காட்சியை காண வேண்டும்

   யாரால்..... யாருக்கு.....

(04 புள்ளிகள்**)**

7. பின்வரும் திருப் பாடல்களில் ஒன்றை வரிசைக்கிரமமாக எழுதுக.

1. சடையாய் எனுமால்.....
2. மண்ணில் நல்ல வண்ணம் .....
3. ஒளிவளர் விளக்கே .....
4. ஆதியாய் நடுவும் ..... **(10** புள்ளிகள்**)**

8. இடைவெளிகளைப் பூர்த்தி செய்க

1. மாசில் .....

   வீசு தென்றலும் .....

   மூசு வண்டறை .....

   ..... இணையடி நீழலே

(10 புள்ளிகள்**)**